**தலைப்பு 157 – தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளதென்றும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட நடைமுறை மற்றும் மூலதன செலவினங்கள் முறையே ரூபா 98.19 மில்லியன் மற்றும் ரூபா 928.6 மில்லியன் தொகை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்குரிய வரவு அறிவித்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதி ஏற்பாட்டின் மூலம் செய்யப்பட் செலவினங்களுக்குரிய வரவு அறிவித்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிடைக்கின்ற சகல வரவு அறிவித்தல்களும் கோவையில் இடப்பட்டுள்ளதுடன், சிலவேளைகளில் அந்த அலுவலகங்களில் இருந்து வரவு அறிவித்தல் கிடைக்கப்பெறாதிருந்த போதிலும் அவர்களினால் அனுப்பப்படுகின்ற செலவு அறிக்கை மற்றும் மாதாந்த கணக்கு வைப்புக்கள் என்பன ஒப்பீடு செய்து பார்த்தல் இடம் பெறுகின்றது. |

## 1.6.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்மைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு அறிக்கையொன்று எழுத்துமூலம் தயாரிக்கப்பட்டு அதனை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

**1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 156(7) | 50 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,808,043 தொகையான முற்பணத் தொகையில் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையினான வீச்சில் ரூபா 1,093,070 தொகை சேமிக்கப்பட்டு பணமாக மீண்டும் செலுத்தப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பீடு செய்தல் முறையாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் செலவின முகாமைத்துவ நடவடிக்கைகளைச் செய்யும் போது இவ்வாறு பணம் சேமிக்கப்பட்டதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2019 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய MF/122/CM/2019/319 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பின் (ii)(ஆ) | காணாமல் போன நபர்களுக்காக வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழை இரத்துச் செய்வதற்கு முடியாதவாறான சான்றுதழொன்றை விநியோகிப்பதற்காக முழுமையான வழிகாட்டிக் கோவையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான வழிகாட்டிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணப்படாத சான்றுதழை விநியோகிப்பதற்காக முழுமையான வழிகாட்டிக் கோவையொன்று தயாரித்தல் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. |

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திட்டமிடப்பட்ட பிரகாரம் கோரப்பட வேண்டிய கட்டுநிதிக்கும் கோரப்பட்ட கட்டுநிதிக்குமிடையே ரூபா 2,232.67 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் கோரப்பட்ட கட்டுநிதிக்கும் கிடைத்த கட்டுநிதிக்கும் இடையே ரூபா 899.20 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் கட்டுநிதி கோரப்பட வேண்டும். | திறைசேரியின் மூலம் கோரப்பட்ட மொத்த தொகையும் கிடைக்கப்பெறாதிருந்த துடன் வழங்கப்பட்ட பணம் செலவின முகாமைத்துவத்தின் மூலம் அத்தியவசிய பணிகளுக்கு மாத்திரம் செலவிடப்படுகின்றது. |

2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 02 மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 2,574 மில்லியன் வருடாந்த நிதி ஏற்பாட்டிற்காக குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலமும் ரூபா 1,388.52 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 5/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுத்தி வைத்ததன் பின்னரும் தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 60 சதவீதத்திற்கு சமமான ரூபா 841.52 மில்லியன் மற்றும் 77 சதவீதத்திற்கு சமமான ரூபா 1,204.24 மில்லியன் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் வகையில் வருடாந்த செலவின விடய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 5/2019 சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் மொழி மற்றும் சமூக ஒருமைப்பாடு நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படாமையின் காரணமாக செலவின விடயங்களுக்கான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 07 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 122 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | இதில் 2002 செலவின விடயத்திற்காக தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 5/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சேமிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மூலதன செலவின விடயங்கள் 30 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,060.64 மில்லியன் கூட்டுத் தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் கூட்டு மொத்தமாக ரூபா 395.36 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையினால் ரூபா 665.28 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 15 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | -மேற்படி- | பிரதி அமைச்சர் அலுவலகம் கலைக்கப்பட்டமை, 2019 ஆம் ஆண்டின் போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படாமை, வெளிநாட்டுப் பிரயாணங்கள் வரையறுக்கப்பட்டமை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு இணைப்பு உத்தியோகத்தர்களுக்காக சம்பள மாற்றங்கள் மேற்கொள்ளப்படாமையினால் செலவின விடயங்களின் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 12 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 727 மில்லியன் கூட்டுத் தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 262.99 மில்லியனம் கூட்டுத் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால் ரூபா 464 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 40 சதவீதம் முதல் 99.67 சதவீதம் வரையிலான வீச்சினை கொண்டிருந்தது. | -மேற்படி- | உயிர்த்த ஞாயிறு தாக்குதல், செலவின முகாமைத்துவம் மற்றும் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 5/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மூலதன செலவின விடயங்களில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 810.58 மில்லியன் தொகையாக இருந்ததுடன் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 788.54 மில்லியன் ஆனமையால் வேறுபாடு ரூபா 22.03 மில்லியன் ஆக இருந்தது. இது 2018 ஆம் ஆண்டில் பொறுப்பொன்றாக இருந்தமையால் அந்த பொறுப்புக்களை மீளாய்வாண்டின் போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அகற்றப்பட்டு 2019 ஆம் ஆண்டிற்குரியதாக விநியோகிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) 2019 இன் நிதி கூற்றுக்களில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கும் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிற்கும் செலுத்த வேண்டிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 2.15 மில்லியன் தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது அந்த நிறுவனத்தினால் எழுத்து மூலம் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் விபரங்கள் மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் கடன் முற்பணம் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வேலை நீக்கம் செய்யப்பட்ட 03 உத்தியோகத்தர்களிடமிருந்தது அறவிட வேண்டிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 235,320 கூட்டுமொத்த தொகை | கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டு ஊழியர்களிடமிருந்து கடன் மீதியை அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| மற்றும் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ஒரு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 229,415 தொகையான கடன் மீதி என்பவற்றை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் கிடைக்கப்பெறாமை.

--------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க பணியகத்தினால் மல்மடுவாவ கிராமத்தின் குடியிருப்பாளர்களுக்கு நீரை வழங்கும் நோக்கில் பொது கிணறுகள் மற்றும் குழாய் நீர் முறைமைக்காக முறையே ரூபா 2.88 மில்லியன் மற்றும் ரூபா 5.29 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. நீரைப் பெற்றுக்கொள்ளும் பொதுக் கிணற்றில் நீர் மட்டத்தை அதிகரித்துக் கொள்வதற்கு கிணற்றை ஆழப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 446,576 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த பிரகாரம் குழாய் நீரைப் பெற்றுக் கொள்ளும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிறுவனம் செயற்பட வேண்டும். | ரூபா 446,576 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் பணிகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) யாழ்ப்பாண மாவட்டத்தில் 3000 மழை நீர் தாங்கிகளை 03 வருடங்களில் நிர்மாணிப்பதற்காக இந்திய அரசாங்கத்திடமிருந்து ரூபா 300 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்தகாரர் இடைநடுவில் வேலையை கைவிட்டதன் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் 16 சதவீதத்திற்கு சமமான 489 தாங்கிகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும், அதற்காக ரூபா 51.95 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் எதிர்பார்த்த செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | எதிர்பார்த்த செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். |

**3.2 ஏனைய அவதானிப்புக்கள்.**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் பயிற்சி செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடான ரூபா 27 மில்லியன் தொகையில் ரூபா 7 மில்லியன் தொகை அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு இந்த செலவின விடயங்களுக்குரித்தற்ற ''பச வடமு - ஹத தினமு'' வானொலி நிகழ்ச்சித் திட்டம் தேசிய ஒருமைப்பாட்டு இணைப்பாளர்களை ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சை மற்றும் பேசும் தமிழ் புத்தக உரையாடல்களுடன் வீடியோ காட்சிகளை தயாரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. | உரிய பணிகளுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் மேலதிக நிதி ஏற்பாட்டின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் 2019 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டமையால் இந்த நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. |

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது கா.பொ.த. (சா.தரம்) இரண்டாம் மொழி சித்தியடைந்த 3185 மாணவர்கள் மதிப்பீட்டிற்காக பரிசு வழங்குவதற்கு ரூபா 4.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்கு இணையாக நடத்தப்பட்ட விழாவிற்காக ரூபா 17.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சிக்கனமானவும் செயற்திறனாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சகல செலவினங்களும் நிதிப் பிரமாணம் மற்றும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் செய்யப்பட்டிருந்தது. |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அமைச்சினால் 2015-2017 காலப்பகுதிக்காக அரசகரும மொழிகள் எண்ணக்கருவை அமுல்படுத்துவதற்காக மத்திய கால மொழி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படவில்லை. | அரசகரும மொழி எண்ணக்கருவை அமுல்படுத்தவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | 2020 – 2022 காலப்பகுதிக்குரிய மொழித் திட்டமொன்று நாளது வரையாக்கப்பட்டு அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற கனேடிய செயற்திட்டத்தின் உதவியுடன் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பொது மக்களினால் நேரடியாக பயன்படுத்தப்படுகின்ற 36 மாதிரி படிவங்கள் மாத்திரம் சிங்கள மொழியிலும், தமிழ் மொழியிலும் மொழி பெயர்ப்பதற்காக ரூபா 1.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட விண்ணப்பம் இணைய தளத்தில் தரவிரக்கம் செய்ய முடியாதிருந்தது. | இணைய தளத்தில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் தேவையான பிரகாரம் தரவிரக்கும் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். | இதில் குறிப்பிடப்பட்ட 36 மாதிரி படிவங்களும் மும்மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு பக்கங்களும் சரி செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது இணைய தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 211 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | அத்தியவசிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | பதவி நிலை உத்தியோகத்தர் பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களைப் போல அமைய பதிவிகளில் காணப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பாகவும் அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு அந்த பதிவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |